இவ்வுரிமை ஆசிரியர் /குழுமப் பதிப்புரிமை உடையதாகும்./All Rights Reserved

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education and Vocational Education

NEW

අ.පො.ස. (සා.පෙළ.) පෙරහුරු ආදර්ශ ප්‍රශ්න පත්‍රය - 2026
கா.பொ.த. (சா/த) முன்னோடி மாதிரி வினாப்பதிரம் - 2026
G. C. E. (O / L) Pre-Model Paper -2026

இஸ்லாம்	16	T	1	1 மணித்தியாலம்

இஸ்லாம் மாதிரி வினாத்தாள் - 1

அறிவுறுத்தல்கள்:

- எல்லா வினாக்களுக:கும் விடை எழுதுக
- 1 – 40 வரையுளள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1),(2),(3),(4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான அல்லது மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவு செய்க
- **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.**
- அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக

1. முதன் முதலில் அருளப்பட்ட அல்குர்ஆன் வசனங்கள் உள்ளடங்கியுள்ள அத்தியாயத்தின் பெயர் என்ன?
(1) சூரதுல் பகரா (2) சூரதுல் அலக் (3) சூரதுல் பாத்திஹா (4) சூரதுல் முஸ்ஸம்மில்

2. மனிதர்கள் செய்வதற்கு அனுமதிக்கப்பட்ட போதும் அல்லாஹ்வால் மிகவும் வெறுக்கப்பட்ட செயலாகக் கருதப்படுவது யாது?
(1) தலாக் (2) சேர்த்துத் தொழுதல் (3) பலதாரமணம் (4) ஸியாரதுல் குபூர்

3. நபி (ஸல்) அவர்களின் மறைவிற்குப் பின்னர் அபூபக்கர் (ரழி) அவர்களை கலீபாவாகத் தெரிவு செய்வதற்கு ஸஹாபாக்கள் ஒன்று கூடிய இடம் எது?
(1) மஸ்ஜிதுன் நபவி (2) தாருன் நத்வா (3) ஸகீபா பனீஸாஇதா (4) மஸ்ஜிதுல் ஹராம்

4. ஹிஜ்ரத் செல்லும் போது நபி (ஸல்) அவர்களும் அபூபக்கர் (ரழி) அவர்களும் தங்கிச் சென்ற இடம் எது?
(1) ஸவ்ர் குகை (2) ஜபலுன் நூர் (3) உஹத் மலை (4) ஹிராக் குகை

5. இஸ்லாத்தில் நம்பிக்கை கொள்ளும் விடயங்கள் பற்றிய கலை எவ்வாறு அழைக்கப்படும்?
(1) உஸூலுல் பிக்ஹ் (2) உலூமுல் குர்ஆன் (3) இல்முல் ஹதீஸ் (4) இல்முல் அகீதா

6. பின்வருவனவற்றுள் நிகாஹின் நிபந்தனைகளுடன் **தொடர்புபடாத** அம்சம் யாது?
(1) வலி (2) ஈஜாப் (3) தலாக் (4) மஹர்

7. வியாபாரக் கொடுக்கல் வாங்களில் தடுக்கப்பட்ட அம்சங்களுள் ஒன்றை தெரிவு செய்க.
(1) கடனுக்கு விற்றல் (2) பொருளைத் தாமதித்து கையளித்தல்
(3) விலையைக் குறைத்து விற்றல் (4) தேவையின்றி சத்தியம் செய்தல்

8. நபி (ஸல்) அவர்கள் முதலில் தடுத்து, பின்னர் அனுமதித்த விவசாய நுட்பமுறை யாது?
(1) மரக்கிளைகளைக் கத்தரித்தல் (2) செயற்கை மகரந்தச் சேர்க்கை
(3) செயற்கை உரம் பயன்படுத்தல் (4) தண்டொட்டு முறை

9. நபி (ஸல்) அவர்களது ஸீராவை முதன் முதல் எழுதியவர் யார்?
(1) அப்துல் மலிக் பின் ஹிஷாம் (2) மௌலானா முபாரக்பூரி
(3) இப்னு இஸ்ஹாக் (4) இமாம் இப்னு கஸீர்

10. முதல் வஹியின் அதிர்ச்சியுடன் வீட்டுக்கு வந்த நபி (ஸல்) அவர்கள் தனக்கு நேர்ந்த சம்பவத்தை முதலில் யாரிடம் கூறினார்.
(1) அன்னை கதீஜா (ரழி) (2) அன்னை ஆய்ஷா (ரழி) (3) அன்னை ஆமினா (ரழி) (4) அபூபக்கர் (ரழி)

11. பின்வரும் பதங்களைக் கருத்திற் கொள்க

A. மிஹ்ராப் B. மஹர் C. மிம்பர் D. நபகா E. மினாரா F. குப்பா G. குல்உ H. மக்பரா

மேற்குறித்தவற்றுள் மஸ்ஜிதின் கட்டடக் கலையுடன் தொடர்புடைய பதங்களைக் கொண்ட தொகுதி எது?

(1) ACEF (2) ABCF (3) ABEF (4) BCEF

12. ஸக்காத் கடமையை நிறைவேற்றும் போது கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டிய ஒரு விடயம் எது?
(1) ஸக்காத்தை இரகசியமாக வழங்குதல் (2) குடும்ப உறுப்பினர்களுக்குக் வழங்குதல்
(3) கேட்டுவருவோருக்கு மாத்திரம் கொடுத்தல் (4) ஸக்காத் பெறத் தகுதியானோருக்கு வழங்குதல்

13. நபி (ஸல்) அவர்களது ஸுன்னாவை பாதுகாப்பதற்கு ஸஹாபாக்கள் மேற் கொண்ட முயற்சிகளுள் ஒன்று யாது?
(1) விளக்க உரை எழுதுதல் (2) நடைமுறைப்படுத்தல்
(3) ஹதீஸ் கலைகளை உருவாக்குதல் (4) நூலுருப்படுத்தல்

14. நபி மூஸா (அலை) அவர்களது வாழ்வுடன் சம்பந்தப்பட்ட தொகுதியைத் தெரிவு செய்க
(1) பல்கீஸ், தூர்சீனா மலை, ஹுத்ஹுத் (2) அபீஸீனியா, இமய மலை, கைத்தடி
(3) நைல் நதி, க.்பா, கைத்தடி (4) நைல் நதி, தூர்சீனா மலை, கைத்தடி

15. பின்வரும் அட்டவணையில் ஒரு பகுதியில் சில அரபுச் சொற்களும் அடுத்த பகுதியில் அதன் தமிழ் வடிவமும் தரப்பட்டுள்ளன.

அரபுச் சொற்கள்	தமிழ் வடிவம்
1. முஷாரகா	A. முற்பணக் கொடுப்பனவு வியாபாரம்
2. முழாரபா	B. பங்குடமை
3. ஸலம்	C. கூட்டுப் பங்காண்மை

மேற்குறித்த அரபுச் சொற்களுக்கு ஏற்ப முறையே அதன் பொருளை ஒழுங்குபடுத்தினால் அமையும் தெரிவு யாது?

(1) ABC (2) ACB (3) BCA (4) CBA

16. ஒருவர் தனது மனைவியை தாய்க்கு ஒப்பிடுவதன் ஊடாக இடம் பெறும் விவாக முறிவு எது?
(1) தலாக் (2) லிஹார (3) லிஆன் (4) பஸ்கு

17. முஜ்தஹித் ஒருவரிடம் காணப்பட வேண்டிய முக்கியமான பண்புகளில் ஒன்று யாது?
(1) ஸலபுஸ் ஸாலிஹீன்களில் ஒருவராக இருத்தல் (2) இஸ்லாமிய நாடொன்றைச் சார்ந்தவராக இருத்தல்
(3) குறைஷிக் குலத்தை சார்ந்தவராக இருத்தல் (4) குர்ஆன் ஸுன்னாவில் புலமை பெற்றிருத்தல்

18. ஸுன்னத்தான நோன்பு நோற்பதற்கு மிகப் பொருத்தமான தினங்கள் யாவை?
(1) திங்கள், வியாழன் (2) ஞாயிறு, திங்கள் (3) திங்கள், செவ்வாய் (4) வெள்ளி, சனி,

19. அல்குர்ஆனில் எழுபதுக்கும் மேற்பட்ட இடங்களில் கூறப்படும் நற்பண்பு யாது?
(1) பணிவு (2) மன்னிப்பு (3) துணிவு (4) பொறுமை

20. பின்வரும் அட்டவணையில் "அ" நிரலில் நூல்களும் "ஆ" நிரலில் அவற்றை எழுதியோர்களின் பெயர்களும் தரப்பட்டுள்ளன.

ஆ	ஆ
1. பிக்ஹுல் அக்பர்	A. இமாம் நவவி (ரஹ்)
2. முஸ்னத்	B. இமாம் அபூ ஹனீபா (ரஹ்)
3. கிதாபுல் உம்மு	C. இமாம் அஹ்மத் (ரஹ்)
4. ரியாழுஸ் ஸாலிஹீன்	D. இமாம் ஷாபிஈ (ரஹ்)

மேலே "அ" நிரலில் உள்ளவற்றை "ஆ" நிரலில் உள்ளவற்றுடன் ஒழுங்கு படுத்தும் போது உருவாகும் சரயான சேர்மானத் தொகுதி யாது?

(1) ABCD (2) BACD (3) BCDA (4) BDCA

21. இலங்கை முஸ்லிம்களின் வேண்டுகோளின்பேரில் பக்தாத் கலீபாவால் அனுப்பி வைக்கப்பட்ட மார்க்க அறிஞர் யார்?
(1) மாப்பிள்ளை ஆலிம் (2) இப்னு பதூதா (3) வஹப் பின் அபீ கப்ஷா (4) காலித் பின் பகாயா

22. பின்வருவனவற்றுள் நேர் - எதிர் கருத்துக்களை காட்டும் சொற் தொகுதி யாது?
(1) அல் ஹதீஸ் - அஸ்ஸுன்னா (2) யவ்முத் தீன் - யவ்முல் ஆகிரா
(3) குர்ஆன் - முஸ்ஹப் (4) அல் ஜன்னத் - அந்நார்

23. பின்வரும் அட்டவணையில் X நிரலில் நாடுகளும் Y நிரலில் அங்கு சென்ற தூதுவர்களின் பெயர்களும் தரப்பட்டுள்ளன.

X	Y
1. அபீசீனியா	A. ஹாதிப் பின் அபீ பல்தஆ
2. எகிப்து	B. திஹ்யிய்யதுல் கல்பி
3. பாரசீகம்	C. அம்ரிப்னு உமையா
4. உரோமம்	D. அப்துல்லாஹ் ஹுதாபா

(1) ACDB (2) BACD (3) CADB (4) CDAB

24. கலீபா அபூ பக்கர் (ரழி) அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதும் முதன் முதல் நிறைவேற்றிய முக்கிய பணி யாது?
(1) போலி நபிமார்களை அடக்கியமை (2) அல்குர்ஆனை நூலுருப்படுத்தியமை
(3) இராணுவ முகாம்களை நிறுவியமை (4) ஹிஜ்ரி கலண்டரை அறிமுகப்படுத்தியமை

25. தவாபுல் விதா நிறைவேற்றப்படும் சந்தர்ப்பம் யாது?
(1) மக்காவில் நுழைந்ததும் (2) மக்காவில் இருந்து வெளியேறும் போது
(3) மினாவில் இருந்து திரும்பியதும் (4) துல் ஹஜ் பிறை 13 இல்

26. ரமழான் மாதம் பற்றிய சரியான கூற்று எது?
(1) ரமழானில் நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் சென்றார்கள்.
(2) ரமழானில் நபி (ஸல்) அவர்கள் மி.ராஜ் சென்றார்கள்.
(3) ரமழானில் நபி (ஸல்) அவர்களுக்கு அல்குர்ஆன் அருளப்பட்டது.
(4) ரமழானில் நபி (ஸல்) அவர்களுக்கு தொழுகை கடமையாக்கப்பட்டது.

27. குற்றம் நிகழ்ந்து விடும் எனும் அச்சம் காரணமாக சந்தேகத்திற்கிடமானவைகளைத் தவிர்ந்து கொள்வது எவ்வாறு அழைக்கப்படும்?
(1) தவ்பா (2) வர. (3) ஸுஹ்த் (4) கவ்ப்

28. மத்ரஸதுல் அஸர், மத்ரஸதுல் ர.யி ஆகிய இரண்டு சிந்தனைப் போக்கினையும் இணைத்து முற்போக்கான முறையில் தீர்ப்பு வழங்கிய இமாம் யார்?
(1) இமாம் ஷாபிஈ (ரஹ்) (2) இமாம் அபூஹனீபா (ரஹ்)
(3) இமாம் மாலிக் (ரஹ்) (4) இமாம் அஹ்மத் (ரஹ்)

29. இலங்கை முஸ்லிம்கள் தேசத்தின் நலனுக்கு செய்த பங்களிப்புக்களில் ஒன்று யாது?
(1) கப்பல் போக்குவரத்துத் துறையை விரிவுபடுத்தியமை
(2) ஆங்கில மருத்துவ முறையை அறிமுகம் செய்தமை
(3) உள்நாட்டு வாசனைத் திரவியங்களைப் பயிரிட்டமை
(4) நெசவுத் தொழிலாளர்களை அழைத்து வந்து அத்துறையை அறிமுகம் செய்தமை

30. மார்க்கத்தில் மிதமிஞ்சிய நுணுக்கத்துடன் செயற்படுவோர் பற்றி நபி (ஸல்) அவர்கள் கூறிய கூற்றைத் தெரிவு செய்க
(1) மிதமிஞ்சிய நுணுக்கத்துடன் செயற்படுவோர் மாத்திரமே சுவனம் நுழைவர்
(2) மிதமிஞ்சிய நுணுக்கத்துடன் செயற்படுவோர் அழிவுக்குள்ளாகட்டும்
(3) மிதமிஞ்சிய நுணுக்கத்துடன் செயற்படுவோர் இம்மையிலும் மறுமையிலும் வெற்றியடைவர்
(4) மிதமிஞ்சிய நுணுக்கத்துடன் செயற்படுவோர் மறுமையில் வெற்றியடைவர்

31. அரேபியர் இலங்கையின் கரையோரங்களில் குடியமர்வதற்கு ஏதுவாய் அமைந்த காரணிகளில் ஒன்றைத் தெரிவு செய்க
(1) இலங்கை அரபுத் தீப கற்பத்திற்கு மிக அண்மையில் அமைந்திருந்தமை
(2) இலங்கைத் துறைமுகங்களில் குடிநீர் உணவு வசதி காணப்பட்டமை
(3) இலங்கையின் கரையோரக் காலநிலையும் அரேபிய நாட்டுக் காலநிலையும் ஒத்ததாக அமைந்திருந்தமை
(4) மன்னர்கள் கரையோரங்களில் மாத்திரம் தங்கும்படி பணித்தமை

32. பின்வருவனவற்றுள் குல்உ பற்றிய சரியான கூற்று
(1) மனைவி கணவனுக்கு ஏதேனும் நன்கொடை வழங்கி பிரிதல்
(2) மனைவியை தாய்க்கு ஒப்பாக்கி பிரிதல்
(3) கணவனும் மனைவியும் மஹ்ரமிகள் எனத் தெரிய வருதல்
(4) கனவன் காழியிடம் முறையிட்டு மனைவியைப் பிரிதல்

33. உடற்பலமும் பொருளாதார பலமும் உள்ள ஓர் ஆண். பாவத்தில் வீழ்ந்து விடுவார் என அஞ்சினால் அவர் திருமணம் செய்வது
(1) மக்ரூஹ் ஆகும் (2) முபாஹ் ஆகும் (3) வாஜிப் ஆகும் (4) ஸுன்னத் ஆகும்

34. இரும்பைக் கையாலும் தொழிற் நுட்ப அறிவு கொடுக்கப்பட்டதாக குர்ஆன் குறிப்பிடும் நபி யார்?
(1) நூஹ் (அலை) (2) இப்ராஹீம் (அலை) (3) தாவூத் (அலை) (4) ஸுலைமான் (அலை)

35. நபிமார்கள் பாவங்கள் பிழைகள் செய்வதிலிருந்து பாதுகாக்கப்பட்டவர்கள் என்பதைக் குறிக்கும் பதம்
(1) விலாயத் (2) இஸ்மத் (3) ஹிதாயத் (4) நுபுவ்வத்

36. பின்வரும் செயற்பாடுகளுள் முதன்மைப்படுத்த வேண்டிய விடயம்
(1) வெள்ளிக்கிழமை இரவில் சூரா க.்ப் ஓதுதல்
(2) வீட்டு வேலைகளில் பெற்றோருக்கு உதவுதல்
(3) பர்ளுத் தொழுகையை உரிய நேரத்தில் நிறைவேற்றுதல்
(4) பாடசாலையில் தரப்பட்ட வேலைகளை செய்து முடித்தல்.

37. அகீதாவில் மறுமை வாழ்வுடன் தொடர்பான அனைத்து விடயங்களும் விளக்கும் பகுதி எவ்வாறு அழைக்கப்படுகிறது?
(1) அஸ்ஸம்இய்யாத் (2) அர்ரூஹானிய்யாத் (3) அந்நுபுவ்வாத் (4) அல் இலாஹிய்யாத்

38. பின்வரும் அரபுச் சொற்களுள் ஆன்மீக பண்புகளுடன் தொடர்பான சொற்களைக் கொண்ட தொகுதியை தெரிவு செய்க
A. ஸவ்ம் B. ஸப்ர் C. ஸக்ர் D. குல்உ E. ரிழா F. தவக்குல் G. ம.்ரிபா H. வரஉ

(1) ABDEF (2) BCEFG (3) BEFGH (4) CDEFH

39. ஷவ்வால் பிறை இரண்டிலிருந்து ஆறு வரை நோன்பு நோற்பதானது
(1) வருடம் முழுவதும் நோன்பு நோற்பதற்கு சமனாகும்
(2) ஷவ்வால் மாதம் முழுவதும் நோன்பு நோற்பதற்கு சமனாகும்
(3) ரமழான் மாதம் முழுவதும் நோன்பு நோற்பதற்கு சமனாகும்
(4) ரமழானிலும், ஷவ்வாலிலும் நோன்பு நோற்பதற்கு சமனாகும்

40. யுத்த களத்தில் தன் முகத்தில் காரி உமிழ்ந்த எதிரியை அலி (ரழி) அவர்கள் எதுவும் செய்யாது விட்டமைக்கான காரணம் யாது?
(1) அலி (ரழி) அவர்களிடம் காணப்பட்ட இரக்க சுபாவம் காரணமாக
(2) யுத்த களத்தில் எதிரியைக் கொள்ளக் கூடாது என்பதற்காக
(3) முகத்தில் காரி உமிழ்ந்தவனை வீழ்த்துவது மார்க்கத்தில் தடுக்கப்பட்டுள்ளது
(4) தனிப்பட்ட கோபம் தனது தூய எண்ணத்தில் தாக்கம் செலுத்தக் கூடாது என்பதற்காக

සියලුම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமை உடையது./All Rights Reserved

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education and Vocational Education

NEW අ.පො.ස. (සා.පෙළ.) පෙරහුරු ආදර්ශ ප්‍රශ්න පත්‍රය - 2026

கா.பொ.த. (சா/த) முன்னோடி மாதிரி வினாப்பதிரம் - 2026

G. C. E. (O / L) Pre-Model Paper -2026

இஸ்லாம்	16	T	2	2 மணித்தியாலம்

- முதலாம் வினாவையும் வேறு நான்கு வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக **ஐந்து** வினாக்களுக்க மாத்திரம் விடை எழுதுக
- முதலாம் வினாவின் விடைக்கு 20 புள்ளிகளும் தெரிவு செய்த ஏனைய ஒவ்வொரு வினாவின் விடைக்கும் 10 புள்ளிகள் வீதம் வழங்கப்படும்

1. சுருக்கமான விடை எழுதுக

    1. மாஉன் தஹ்ர் என்றால் என்ன?
    2. வஹி அருளப்பட்ட முறைகள் இரண்டைக் குறிப்பிடுக
    3. கியாஸ் என்றால் என்ன?
    4. திருமணத்தின் நோக்கங்கள் இரண்டு தருக.
    5. தயமும் செய்வதற்கான இரு சந்தர்ப்பங்கள் தருக.
    6. இஸ்லாமிய அகீதாவுக்கு அடிப்படையாக அமைந்துள்ளவை எவை?
    7. பக்கீர், மிஸ்கீன் இரண்டு பதத்தினதும் விளக்கம் யாது?
    8. நோன்பின் பர்ளுகள் இரண்டையும் குறிப்பிடுக.
    9. இலங்கையில் பின்பற்றப்படுகின்ற பிரதான மத்ஹப் எது?
    10. தொழுகையை விட்ட ஒருவரின் நிலை பற்றிக் குறிப்பிடும் ஒரு ஹதீஸை எழுதுக

2.

    1. அறிஞர்கள் அல்குர்ஆனின் அற்புதங்களை வகைப்படுத்தியுள்ள பிரிவுகள் இரண்டைத் தருக.
    2. மூன்று நபிமார்களின் பெயர்களைக் குறிப்பிட்டு அவர்களுக்கு வழங்கப்பட்ட அற்புதங்களையும் குறிப்பிடுக.
    3. அடிப்படைக் கடமைகள் மனிதனிடம் நற்பண்புகளை எவ்வாறு வளர்க்கின்றன என்பதை விளக்குக.

3.

    1. அல்குர்ஆன் குறிப்பிடும் உள்ளத்தின் படி நிலைகளுள் இரண்டைக் குறிப்பிடுக
    2. இபாதத்தின் நோக்கங்கள் மூன்றினை குறிப்பிடுக.
    3. இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் தொடர்பூடகங்கள் பெற்றிருக்க வேண்டிய பண்புகளை விளக்குக.

4.

    1. மஹ்ரம்களின் இரு வகைகளையும் குறிப்பிடுக.
    2. முஸ்லிம்களின் மூன்று புனிதஸ்தலங்களையும் குறிப்பிடுக
    3. முன்மாதிரி முஸ்லிம் குடும்பம் ஒன்றின் பண்புகள் ஐந்தினை சுருக்கமாக விளக்குக.

5.

1. அரபு நாட்டின் எல்லைகளைக் குறிப்பிடுக
2. மக்கா வாழ்க்கையில் நபி(ஸல்) அவர்கள் எதிர்கொண்ட சோதனைகள் மூன்று தருக.
3. இலங்கையில் இஸ்லாம் அறிமுகமான பின்னணியை சுருக்கமாக விளக்கவும்

6.

1. முழாரபா என்றால் என்ன?
2. நபிமார்கள் மூவரின் பெயர்களைக் குறிப்பிட்டு அவர்கள் மேற்கொண்ட தொழில்களைத் தருக.
3. நபி (ஸல்) அவர்களது ஸீரா பாதுகாக்கப்பட்டு வருவதற்கான காரணங்கள் ஐந்து தருக.

7. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு சிறு குறிப்பு எழுதுக.

1. அல்குர்ஆன் தொகுக்கப்படல்.
2. அகீதாவில் பிரிவுகள் தோன்றக் காரணங்கள்
3. இத்தாவின் வகைகள்
4. கூட்டு ஸக்காத்தின் பயன்கள்.